மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை - 2021

தரம் ஐந்து மாணவர்களுக்கான

முன்னோடிப் பரீட்சை - இல-08

வினாத்தாள் - I

சுட்டெண்:- .....

நேரம் :- 1 மணித்தியாலம்

- **பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்.**
  - **உமது சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**
  - **மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.**
  - **இவ்வினாத்தாளில் 40 வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே தருக.**
  - **ஒவ்வொரு வினாவிற்கும் மூன்று விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றிடையே ஒவ்வொரு வினாவிற்கும் உரிய சரியான விடையைத் தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.**
  - **செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.**


(01) 

இவ்வுருவில் காட்டப்பட்டுள்ள வடிவத்தைப் பெற்றுக்கொள்வதற்காக சதுர வடிவான கடதாசி ஒன்றை நான்காக மடித்து வெட்ட வேண்டிய முறை,

(1) 
(2) 
(3) 

(02)  - நகரம்  - மாவட்டம்  - கிராமம்


மேலேயுள்ள தகவல்களைச் சரியாகக் காட்டும் உரு,

(1) 
(2) 
(3) 

(03) பின்வரும் எண்கோலத்திலுள்ள இரு வெற்றுக்கூண்டுகளுக்கும் பொருத்தமான எண்கள் முறையே,


3 , 80 , 6 , 70 , 9 , 60 , 12 , ☐ , ☐

(1) ☐ 50 , ☐ 15 (2) ☐ 15 , ☐ 50 (3) ☐ 40 , ☐ 16

(04) 


கனவுரு வடிவிலான கண்ணாடிப் பெட்டியொன்றினுள் சிறிய சதுரமுகிகள் அடுக்கப்பட்டுள்ள முறையை இவ்வுரு காட்டுகிறது. அதன்படி, அக்கண்ணாடிப் பெட்டியை முழுமையாக நிரப்புவதற்கு இன்னும் தேவைப்படும் சிறிய சதுரமுகிகளின் எண்ணிக்கை,

(1) 10 (2) 12 (3) 14

(05) 




இவ்வுரு ஒரேயளவான சதுர வடிவங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அதன்படி, நிழற்றப்பட்டுள்ள பகுதிக்குச் சமனான சிறிய சதுரங்களின் எண்ணிக்கை,

(1) 6 (2) 7 (3) 5

(06) 

இக்கார்ட்போர்ட் துண்டை விரிக்கும்போது கிடைக்கும் செவ்வக வடிவான கார்ட்போர்ட் அட்டையின் நீளம், அகலம் முறையே,

(1) நீளம் :- 14cm , அகலம் :- 3cm (2) நீளம் :- 16cm , அகலம் :- 2cm
(3) நீளம் :- 12cm , அகலம் :- 2cm

- 



சில திண்மங்கள் தராசில் நிறுக்கப்பட்டுள்ள முறைகளை மேலேயுள்ள உருக்கள் காட்டுகின்றன. அதன்படி, இலக்கம் (07), (08) ஆகிய வினாக்களுக்கான விடைகளைத் தெரிவு செய்க.

(07) குறைந்த நிறையைக் கொண்ட திண்மம்,

(1) உருளை (2) நான்முகி (3) சதுரமுகி

(08) கூடிய நிறையைக் கொண்ட திண்மம்,

(1) கனவுரு (2) நான்முகி (3) உருளை

www.ikedu.lk

LEARN EASY
– KNOWLEDGE IS POWER –

zoom
வகுப்புக்கள்

Grade 1 - A/L

Medium

TAMIL / ENGLISH

- ICT
- Maths
- English
- Commerce
- Tamil
- History
- Science
- Sinhala

Learn Easy வெளியீடு
புலமைவளரி
இலக்கை நோக்கி


Call: 76667 4945

தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள் தரம் 1 தொடக்கம் தரம் 5 வரை நடைபெறுகின்றன

www.learneasy.lk || www.lkedu.lk

LEARN EASY
KNOWLEDGE IS POWER

* குறித்த தொழிற்சாலையொன்றில் இந்த வருடத்தின் முதல் நான்கு மாதங்களிலும் உற்பத்தி செய்யப்பட்ட டயர்களின் எண்ணிக்கை தொடர்பான விபரங்களைப் பின்வரும் படவரைபு காட்டுகிறது. அதன்படி, இலக்கம் (09), (10) ஆகிய வினாக்களுக்குரிய விடைகளைத் தெரிவு செய்க.



* பெப்ரவரி மாதத்தில் உற்பத்தி செய்யப்பட்ட டயர்களின் எண்ணிக்கை 250 ஆகு


(09) மாதாமாதம் உற்பத்தி செய்யப்படும் டயர்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்லும் கோலத்தின்படி ஜூன் மாதத்தில் உற்பத்தி செய்யப்படும் டயர்கள் எண்ணிக்கை,

(1) 500 (2) 550 (3) 450

(10)  - இவ்வுருவினால் காட்டப்படும் டயர்களின் எண்ணிக்கை,

(1) 75 (2) 60 (3) 80

*




இவ்வுருவில் காட்டப்பட்டுள்ள A, B, C, D ஆகிய நகரங்கள் அமைந்துள்ளது வட்ட வடிவமான பாதையொன்றிலாகும். நகரம் E அவ்வட்ட வடிவமான பாதையின் சரிநடுவே அமைந்துள்ளது. அதன்படி, இலக்கம் (11), (12) ஆகிய வினாக்களுக்கான விடைகளைத் தெரிவு செய்க.

(11) இக்பால் A யிலிருந்து B மற்றும் C ஊடாக D வரை பயணித்தான். அதன்படி, அவன் பயணித்த தூரம்,

(1) 28km (2) 24km (3) 30km

(12) சுனில் A யிலிருந்து E மற்றும் B ஊடாக C வரை பயணித்தான். அதன்படி, அவன் பயணித்த தூரம்,

(1) 20km (2) 22 km (3) 26km

(13) 

செவ்வக வடிவக் காணியொன்றில் கம்பித்தூண்கள் நாட்டப்பட்டுள்ள முறையை இவ்வுரு காட்டுகின்றது. அதன்படி, மொத்தக் காணியையும் சுற்றிக் கம்பித்தூண்கள் நாட்டுவதற்கு இன்னும் தேவைப்படும் கம்பித்தூண்களின் எண்ணிக்கை,

(1) 11 (2) 12 (3) 10

(14) என்னிடம் சம அளவு நீளத்திலான ஈர்க்குத் துண்டுகள் 19 இருந்தன. நான் அவ்வீர்க்குத் துண்டுகளைப் பயன்படுத்தி 18 இலிருந்து 20 வரையுள்ள உரோம எண்குறிகளை அமைத்தேன். அதன்படி, என்னிடம் மீதமாக இருக்கும் ஈர்க்குத் துண்டுகளின் எண்ணிக்கை,

(1) 4 (2) 3 (3) 2

(15) செய்தித்தாளொன்றில் மிகக் குறைவாகக் காணக்கிடைப்பது,

(1) சொற்கள் (2) எழுத்துக்கள் (3) வாக்கியங்கள்

(16) 

இத்தராசின் A பக்கத்தில் ஒரேயளவான நிறையுடைய 3 படிக்கற்களும், B பக்கத்தில் ஒரேயளவான நிறையுடைய 2 படிக்கற்களும் உள்ளன. தராசு சமநிலையில் உள்ளது. அதன்படி, ▨ இப்படியின் நிறை,

(1) 6kg (2) 5kg (3) 12kg

(17) ஜூலை மாதத்தின் 1 ஆம் திகதி புதன்கிழமையாகும். அதன்படி, ஜூலை மாதத்தின் சரிநடுவே வரும் நாள்,

(1) புதன்கிழமை (2) வெள்ளிக்கிழமை (3) வியாழக்கிழமை

(18) 3 , ... , 11 , ... , 19 எண்கோலமொன்றை அமைப்பதற்கு இரு வெற்றிடங்களுக்கும் எழுதக்கூடிய இரண்டு எண்கள் முறையே,

(1) 8 , 17 (2) 7 , 15 (3) 6 , 15

(19) விழாவொன்றிற்கு ஒரேயளவான சில கேக்குகள் கொண்டுவரப்பட்டன. ஒரு கேக்கை 8 துண்டுகளாக வெட்டினால் 48 கேக் துண்டுகள் கிடைக்கும். அதன்படி, ஒரு கேக்கை 9 துண்டுகளாக வெட்டினால் கிடைக்கும் கேக் துண்டுகளின் எண்ணிக்கை,

(1) 54 (2) 63 (3) 52

(20)

6	→	18
3	→	9
4	→	12
2	→	6


இங்கு அம்புக்குறிகள் குறித்து நிற்பது,

(1) 3 ஆல் வகுக்குக.

(2) 3 ஐக் கூட்டுக.

(3) 3 ஆல் பெருக்குக.

www.ikeou.lk

(21) 

இவ்வுருவினால் காட்டப்பட்டுள்ளது சம அளவான 3 வட்டங்களும் செவ்வக வடிவமொன்றும் ஆகும். செவ்வக வடிவத்தின் நீளம் 12cm ஆகும். அதன்படி, அச்செவ்வக வடிவத்தின் அகலம்,

(1) 6cm (2) 4cm (3) 3cm

(22) பின்வரும் எண்களிலிருந்து எண்கோலமொன்று உருவாவதற்கு நீக்கப்பட வேண்டிய எண்,

2 , 9 , 16 , 23 , 27 , 30 , 37

(1) 16 (2) 30 (3) 27

(23) பின்வரும் பாடலை வாசித்து, வினவப்பட்டுள்ள வினாவிற்கான விடையைத் தெரிவு செய்க.

செக்கச்சிவந்த செங்கதிரோனும்
கிழக்கினில் வந்து விட்டான் - புவி
மக்கள் கண் விழித்துக் கிளம்பிட
வானில் உதித்து விட்டான்

இப்பாடலில் வர்ணிக்கப்படும் காட்சி,

(1) காலைக்காட்சி (2) மாலைக்காட்சி (3) இரவுக்காட்சி

(24) நஸீர் 15 நிமிடங்களில் 2km ஓடுவான். வசீம் 30 நிமிடங்களில் 5km ஓடுவான். ஆசிம் 1 மணித்தியாலத்தில் 8km ஓடுவான். அதன்படி, அதிகூடிய வேகத்தில் ஓடக்கூடியவன்,

(1) நஸீர் (2) வசீம் (3) ஆசிம்

(25) மின்குமிழ்க் கோர்வையொன்றில் நீலம், மஞ்சள், நீலம், மஞ்சள் ..... எனும் ஒழுங்குமுறையில் மின்குமிழ்கள் தொங்கவிடப்பட்டுள்ளன. மின்குமிழ்க் கோர்வையிலுள்ள மொத்த மின்குமிழ்களின் எண்ணிக்கை 41 ஆகும். அதன்படி, அக்கோர்வையில் அதிகமாக இருப்பது,

(1) நீல நிற மின்குமிழ்கள் (2) மஞ்சள் நிற மின்குமிழ்கள் (3) கூறமுடியாது.


(26) கீழே தரப்பட்டுள்ள கூற்றுக்களின்படி, சரியான ஆங்கிலச் சொல்லைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவு செய்க.

முதல் எழுத்து NETS இல் உண்டு. BEST இல் இல்லை.
இரண்டாவது எழுத்து LOAN இல் உண்டு. LAND இல் இல்லை.
மூன்றாவது எழுத்து LETS இல் உண்டு. SALE இல் இல்லை.

அதன்படி அச்சொல்,

(1) BAT (2) NOT (3) NOS

(27) பிள்ளையொன்று 20m வீதம் ஒவ்வொரு திசைக்கும் பயணித்தது. அப்பிள்ளை பயணித்த திசைகள் ஒழுங்குமுறையாகக் கீழே காட்டப்பட்டுள்ளன.



அப்பிள்ளை முதலாவதாகப் பயணித்துள்ளது வடகிழக்குத் திசைக்காகும். அதன்படி, அப்பிள்ளை தற்போது இருப்பது பயணத்தை ஆரம்பித்த இடத்திலிருந்து எத்திசையில்?


(1) தென்கிழக்குத் திசையில் (2) தென்மேற்குத் திசையில் (3) கிழக்குத் திசையில்

(28) குறித்த ஒரு மாதத்தின் முதலாவது நாள் புதன்கிழமை ஆகும். இறுதி நாள் செவ்வாய்க்கிழமை ஆகும். அதன்படி, அம்மாதமாக இருக்கக்கூடியது,

(1) செப்டெம்பர் (2) பெப்ரவரி (3) ஜூலை

(29) ஆசிரியரிடம் குறிப்பிட்ட எண்ணிக்கையிலான அப்பியாசக் கொப்பிகள் இருந்தன. அவற்றுடன் இன்னும் 2 அப்பியாசக் கொப்பிகளைச் சேர்த்தால் 3 அப்பியாசக் கொப்பிகள் வீதம் 5 பிள்ளைகளுக்கு வழங்க முடியும். அதன்படி, ஆசிரியரிடம் ஆரம்பத்தில் இருந்த அப்பியாசக் கொப்பிகளின் எண்ணிக்கை,


(1) 13 (2) 15 (3) 12

(30) 

ஒரேயளவான 27 சிறிய சதுரமுகிகளை ஒன்றுடன் ஒன்று ஒட்டுவதன் மூலம் இப்பெரிய சதுரமுகி அமைக்கப்பட்டுள்ளது. அதன்படி, இவற்றுள் ஒரு முகமேனும் வெளியே தென்படாத சிறிய சதுரமுகிகளின் எண்ணிக்கை,

(1) 2 (2) 1 (3) 3

www.ikeau.lk

(31) 

உருவிலுள்ள திண்மத்தில் இருக்கும் முகங்களின் எண்ணிக்கை,

(1) 8 (2) 7 (3) 9


(32)


17	73		19
	37	84	81
69			
	21		52


கூண்டிலுள்ள மிகச்சிறிய எண்ணை மிகப்பெரிய எண்ணால் கழிக்கும்போது கிடைக்கும் விடை,


(1) 56 (2) 62 (3) 67

(33) தொடக்கத்திலுள்ள உருவிற்குச் சமனான உருவைத் தெரிவு செய்க.





(1) 


(2) 


(3) 

(34) சகல விதத்திலும் சமனான உருச்சோடியைத் தெரிவு செய்க.

(1) 

(2) 

(3) 


(35) 

இவ்வுருவில் காணக்கிடைக்கும் வடிவங்களின் மொத்த எண்ணிக்கை,

(1) 6 (2) 7 (3) 5

(36) A பெட்டியில் 14 பந்துகளும், B பெட்டியில் 20 பந்துகளும் உள்ளன. பிள்ளையொன்று A பெட்டியில் உள்ள பந்துகளில் 8 பந்துகளை B பெட்டிக்கும், B பெட்டியில் உள்ள பந்துகளில் 10 பந்துகளை A பெட்டிக்கும் இட்டது. தற்போது A, B பெட்டிகளிலுள்ள பந்துகளின் எண்ணிக்கைகள் முறையே,


(1) A - 12, B - 16 (2) A - 16, B - 18 (3) A - 14, B - 17

(37) 

வட்ட வடிவக் கடதாசியொன்றை பல தடவைகள் மடித்து விரித்தபோது மடிக்கப்பட்ட அடையாளங்கள் உருவில் காணப்படும் முறையில் காணக்கிடைத்தன. அதன்படி, அவ்வட்ட வடிவக் கடதாசியை மடித்த தடவைகளின் எண்ணிக்கை,


(1) 3 (2) 4 (3) 5

(38) கீழேயுள்ள உருக்கள் ஒரு கோல அமைப்பிற்கேற்ப வரையப்பட்டுள்ளன. அதன்படி, அடுத்து வரவேண்டிய உருவைத் தெரிவு செய்க.



(1) 


(2) 

(3) 

(39) 

மீண்டும் இதே முறையில் மணித்தியால முள்ளும் நிமிட முள்ளும் அமைய எடுக்கும் காலம்,

(1) 12 மணித்தியாலங்கள் (2) 1 மணித்தியாலம் (3) 6 மணித்தியாலங்கள்

(40) 

சீசோ ஒன்றின் மீது நின்றுகொண்டிருக்கும் மனிதர்கள் இருவரை இவ்வுரு காட்டுகின்றது. சீசோ சமநிலையானது. அதன்படி, மிகக்கூடிய நிறையைக் கொண்டவர்,

(1) கணேஷ் (2) ரவி (3) கூறமுடியாது.

www.ikeou.lk

(முழுப் பதிப்புரிமையுடையது) (All Rights Reserved)

மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத்
தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை - 2021
தரம் ஐந்து மாணவர்களுக்கான

முன்னோடிப் பரீட்சை - இல-08

வினாத்தாள் - II

சுட்டெண் :- .....

நேரம் :- 1 மணித்தியாலம் 15 நிமிடங்கள்

பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்.
* **உமது சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**
* **மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.**
* **இவ்வினாத்தாளில் 60 வினாக்கள் உள்ளன. சில வினாக்களில் உபபகுதிகளும் உள்ளன.**
* **எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே எழுதுக.**
* **விடைகள் எழுதப்பட வேண்டிய வினாக்களின் விடைகளைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**
* **விடையின் கீழ்க் கோடிடுமாறு கேட்கப்பட்டிருக்கும்போது சரியான விடையைத் தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.**
* **செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.**

(01) பின்வரும் பாடலை வாசித்து, வினவப்பட்டுள்ள வினாக்களுக்கான விடைகளை எழுதுக.

மீன்கள் கோடி சூழ வெண்ணிலாவே - ஒரு
வெள்ளியோடம் போல வரும் வெண்ணிலாவே
வளர்ந்து வளர்ந்து வந்த வெண்ணிலாவே - மீண்டும்
வாடி வாடிப் போவதேனோ வெண்ணிலாவே!

ஆந்தை போல நீயும் வெண்ணிலாவே! - பகல்
கூட்டினுள் உறங்குவாயோ வெண்ணிலாவே
ஆழியும் நீ வரக்கண்டு வெண்ணிலாவே - குதித்து
ஆடுவதெக் காரணமோ? வெண்ணிலாவே!

(i) இப்பாடலில் வரும் அலறும் தொனியுடைய பறவை எது?
.....

(ii) இப்பாடலில் வெண்ணிலாவிற்கு உவமித்துக் கூறப்பட்டுள்ளது எது? .....

(iii) "கடலும்" எனும் பொருளைத் தரும் சொல்லை இனங்கண்டு எழுதுக. .....

(iv) பாடலில் வந்துள்ள நிறுத்தற் குறிகளின் பெயர்களை எழுதுக. .....

(v) எண்பெயர் ஒன்றினை எழுதுக. .....

(02) பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்தினதும் வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.

(i) மடக்கேறும் அரவும், சங்கிலிக்கொம்பு என்பன கொண்டமைந்த சொல் ..... (வைத்தியர் , தூக்கம் , நூதனசாலை)

(ii) இரட்டைக்கொம்பு, விசிறி என்பன கொண்டமைந்த சொல் ..... (சிறப்பு , நேரம் , கேள்வி)

(03) பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்தினதும் வெற்றிடத்திற்குப் பொருத்தமான சரியான எழுத்துக் கூட்டலுடனுள்ள சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.

(i) தக்காளிச் செடி ..... (செளித்து , செழித்து) வளர்ந்தது.

(ii) சிறுவன் ..... (கடற்கரையில் , கடற்கறையில்) சிப்பி பொறுக்கினான்.

(04) பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுவாய், பயனிலைத் தொடர்பு சரியாயின் (✓) எனவும், பிழையாயின் (X) எனவும் எதிரேயுள்ள அடைப்பினுள்ளே அடையாளம் இடுக.

(i) பறவை தன் குஞ்சுகளுக்கு இரை கொடுத்தன. ( )

(ii) மக்கள் பற்றைச் செடிகளை வெட்டினர். ( )

(iii) குளத்தில் தாமரைப்பூ மலர்ந்தன. ( )

(iv) மீன்கள் தடாகத்தில் நீந்தியது. ( )

(05) பின்வரும் இணைமொழிகளின் கருத்துக்களை எதிரே தரப்பட்டுள்ள புள்ளிக்கோடுகளில் எழுதுக.

(i) நகமும் சதையும் :- .....

(ii) மூலை முடுக்கு :- .....

(06) பின்வரும் சொற்களைச் சேர்த்து எழுதுக.

(i) குரல் + ஓசை :- .....

(ii) மலை + உச்சி :- .....

(07) (i) பின்வரும் பழமொழியைப் பூர்த்தி செய்யப் பொருத்தமான சொல்லைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

போதும் என்ற ..... பொன் செய்யும் மருந்து.

(ii) பின்வரும் சொற்களை ஒழுங்குபடுத்தித் தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டில் சரியான பழமொழியாக எழுதுக.

மாட்டுக்கு / பச்சை / இக்கரை / அக்கரை :- .....

(08) ஆண்பால் சொல்லை எழுதுக. திருடி :- .....

(09) கீழே தரப்பட்டுள்ள வாக்கியத்தை எழுத்து வழக்கில் எழுதுக.

மாமா வெத்திலை பறித்தார். :- .....

www.ikedu.lk

STUDY ONLINE

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்



இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்


WWW.LKEDU.LK

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...

(10) **உயர்திணை ஒருமைப் பெண்பால் பெயர்ச்சொல்லைத் தெரிவுசெய்து கோடிடுக.**

கோழி , பெண்கள் , ஆசிரியர் , அவள்

(11) 

அருகே உள்ள உருவில் அம்புக்குறிகளினால் குறித்துக்காட்டப்பட்டுள்ள பகுதிகளின் பெயர்களை ஆங்கிலத்தில் எழுதுக.

(i) A :- ..... (ii) B :- .....

(iii) C :- .....

(12) தரப்பட்டுள்ள தமிழ்ச் சொற்களுக்குரிய ஆங்கிலச் சொற்களை எழுதுக.

(i) அம்மா :- ..... (ii) போத்தல் :- .....

(13) "Tree" என்ற சொல்லின் பன்மை வடிவினை எழுதுக. .....


(14) பின்வரும் சிங்கள வாக்கியத்தின் கருத்தைத் தமிழில் எழுதுக.

மல்லி இன்னவா. :- .....

(15) பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் கூறப்படும் விதத்தைத் தமிழ் எழுத்துகளில் எழுதுக.

அப்பம் வேண்டாம். :- .....

(16) 9756 + 24135 இன் விடையைச் சொற்களில் எழுதுக. .....

(17) 


(i) இக்கார்ட்போர்ட் துண்டைப் புள்ளிக்கோடுகளின் வழியே மடித்து ஒட்டுவதன் மூலம் அமைத்துக்கொள்ளக்கூடிய திண்மத்தின் பெயரை எழுதுக. .....

(ii) அமைத்துக்கொள்ளப்பட்ட திண்மத்தின் விளிம்புகளுக்கும், உச்சிகளுக்கும் இடையிலான வித்தியாசம் யாது? .....


(18) 99 சவர்க்காரக் கட்டிகள் ஒரு பெட்டியில் 4 வீதம் அடுக்கப்பட்டன. அதன்படி, 4 சவர்க்காரக் கட்டிகள் வீதம் அடுக்கப்பட்டுள்ள பெட்டிகளின் எண்ணிக்கை யாது? .....

(19) பின்வரும் எண்களுள் 6 எனும் இலக்கத்தினால் காட்டப்படும் பெறுமதி 600 ஆகவுள்ள எண் யாது?


6745 , 5186 , 4627 , 9160 :- .....

(20) (i) 


இவ்வுருவின் $\frac{1}{4}$ ஐப் பென்சிலினால் நிறம் தீட்டுக.

(ii) 

இவ்வுருவில் 0.6 ஐ விட நிழற்றிக் காட்டுக.

(21) 

இவ்வுருவினால் காட்டப்பட்டுள்ளது எல்லாப் பக்கங்களும் நீளத்தில் சமனான முக்கோணம் ஒன்றாகும். இவ்வுருவிலுள்ள சமச்சீர்க் கோடுகளை வரைந்து காட்டுக.

(22) 

A அமைந்துள்ளது B இற்கு வடமேற்குத் திசையிலாகும். அதன்படி, C அமைந்துள்ளது B இற்கு எத்திசையிலாகும்? .....

(23) ரமேஷ் வீட்டிலிருந்து புறப்பட்டது மு.ப 2.30 க்கு ஆகும். அவன் வீட்டிலிருந்த காலம் 4 மணித்தியாலம் ஆகும். அதன்படி, அவன் வீட்டிற்கு வந்த நேரத்தை 24 மணித்தியாலக் கடிகார நேரமாக எழுதுக. .....

(24) ஒரு பாத்திரத்திலுள்ள நீரின் கனவளவு 900ml ஆகும். அத்தகைய 6 பாத்திரங்களில் உள்ள நீரின் கனவளவை லீற்றர், மில்லிலீற்றரில் எழுதுக.

லீற்றர் :- ..... மில்லிலீற்றர் :- .....

(25)


		அநுராதபுரம்
	புத்தளம்	74
கொழும்பு	131	205
அம்பாந்தோட்டை	237	328	362

இவ்வட்டவணையில் நகரங்களுக்கு இடையிலான தூரங்கள் கிலோமீற்றரில் காட்டப்பட்டுள்ளன. அதன்படி, அம்பாந்தோட்டையில் இருந்து புத்தளம் ஊடாக அநுராதபுரத்திற்கு உள்ள தூரம் யாது? .....

(26) (i) 2 , 4 , 8 , 16 , 32 , ☐ இவ்வெண்கோலத்தின் வெற்றுக்கூண்டிற்குப் பொருத்தமான எண்ணை வெற்றுக்கூண்டின் உள்ளேயே எழுதுக.

(ii) மேற்படி எண்கோலத்தின் பொது விகிதம் யாது? .....

www.ikeou.lk

(27) 

சுட்டெண்:.....

இவ்வுருவில் உரோம எண்குறிகள் எழுதப்பட்டுள்ளது ஏதோவொரு கோலத்திற்கேற்பவாகும். அதன்படி, வெற்றுவட்டத்திற்குப் பொருத்தமான உரோம எண்குறியை வெற்றுவட்டத்தின் உள்ளேயே எழுதுக.

(28) பாடசாலையொன்றின் 5A, 5B, 5C ஆகிய வகுப்புகளில் உள்ள ஆண் பிள்ளைகளின் எண்ணிக்கைகளும், பெண் பிள்ளைகளின் எண்ணிக்கைகளும் கீழே அட்டவணையினால் காட்டப்பட்டுள்ளன. அதன்படி, வினவப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.

வகுப்புகள்	ஆண் பிள்ளைகள்	பெண் பிள்ளைகள்
5A	12	13
5B	15	9
5C	11	15

(i) அதிக எண்ணிக்கையிலான மாணவர்கள் உள்ள வகுப்பு எது?

.....


(ii) மூன்று வகுப்புகளிலும் அதிக எண்ணிக்கையிலுள்ளது ஆண் பிள்ளைகளா? பெண் பிள்ளைகளா? .....

(29) 3 பேனைகளின் விலை ரூபா 36.00 ஆகும். அதன்படி, 2 பேனைகளின் விலை யாது? .....

*** இலக்கம் (30) தொடக்கம் (59) வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் உரிய விடையைத் தரப்பட்டுள்ள விடைகளில் இருந்து தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.**

(30) மீனவர்கள் ஒரே தடவையில் அதிகளவான மீன்களைப் பிடிக்கப் பயன்படுத்துவது,

(1) தூண்டில் (2) அத்தாங்கு (3) கரைவலை

(31) 

அருகே காட்டப்பட்டுள்ள கத்தரிக்கோலில் A யினால் காட்டப்படும் துளையினுள் நுழைக்கும் கை விரல்,

(1) பெருவிரல் (2) நடுவிரல் (3) சுட்டுவிரல்

(32) "முன்னால் வரும் வாகனங்களை நிறுத்தவும், பின்னால் வரும் வாகனங்களை நிறுத்தவும்" எனும் சமிக்ஞையை வழங்கும் பொலிஸ் அதிகாரி,

(1) 

(2) 

(3) 

(33) 

இசைக்கப்படுவதற்காக இவ்வுபகரணம் பயன்படுத்தப்படும் சங்கீத வாத்தியம்,

(1) 

(2) 

(3) 

(34) சிறிய பிள்ளைகள் உள்ள வீட்டில் பயன்படுத்துவதற்கு மிகப் பொருத்தமான மண்ணெண்ணெய் விளக்கு,

(1) 

(2) 

(3) 

(35) இலங்கையின் தேசிய கீதத்தின் ஆரம்ப வரி,

(1) நம் ஸ்ரீ லங்கா (2) நமோ நமோ தாயே (3) ஸ்ரீ லங்கா தாயே

(36) இலங்கையில் ஒலிம்பிக் பதக்கங்களை வென்ற விளையாட்டு வீரர்களின் எண்ணிக்கை,

(1) 3 (2) 2 (3) 4

(37) கோள வடிவான பந்து பயன்படுத்தப்படாத விளையாட்டு,

(1) றகர் (2) காற்பந்து (3) கரப்பந்து

(38) சர்வதேச சிறுவர் தினம் கொண்டாடப்படுவது,

(1) சர்வதேச முதியோர் தினத்தன்று (2) சர்வதேச சுற்றாடல் தினத்தன்று (3) சர்வதேச நீர்த் தினத்தன்று

(39) "மைனா" காட்டப்பட்டுள்ள உரு,

(1) 

(2) 

(3) 

(40) புல்லாங்குழலின் துளைகள் மிகச் சரியாக வரையப்பட்டுள்ள உரு,

(1) 

(2) 

(3) 

(41) உடலிலுள்ள முட்களைச் சிலிர்த்துக்கொள்வதன் மூலம் எதிரிகளிடமிருந்து தன்னைப் பாதுகாத்துக்கொள்ளும் பிராணி,

(1) ஆமடில்லா (2) முள்ளம்பன்றி (3) தேள்

www.ikedu.lk

(42) நிறையுணவு வேளையொன்றில் அடங்க வேண்டிய போசணைக் கூறுகள் கீழே தரப்பட்டுள்ளன.

புரதம் , ... A ..... , கொழுப்பு , ... B ..... , கனியுப்புக்கள் , நீர்

மேற்படி A , B ஆகிய வெற்றிடங்களுக்குப் பொருத்தமான போசணைக் கூறுகள்,

(1) A :- காபோவைதரேற்று , B :- விற்றமின்கள்
(2) A :- அயடீன் , B :- இரும்பு
(3) A :- கல்சியம் , B :- காபோவைதரேற்று

(43) கடந்த ஆண்டிலும் இந்த ஆண்டிலும் உலகின் பல நாடுகளிலும் வேகமாகப் பரவிய தொற்று நோயொன்று,

(1) டெங்கு (2) மலேரியா (3) கொவிட்-19

(44)  மரங்களில் கரடுமுரடான பகுதிகளைச் செதுக்குவதற்காகப் பயன்படுத்தப்படும் இவ்வுபகரணத்தின் பெயர்

(1) சீவுளி (2) வாச்சு (3) உளி

(45) அசுத்தமான நீரைப் பருகுவதால் ஏற்படும் நோய் அல்லாதது,

(1) நெருப்புக் காய்ச்சல் (2) மஞ்சள் காமாலை (3) சிக்குன்குன்யா

(46) "குளவி" தன்னுடைய கூட்டை அமைத்துக்கொள்வது,

(1) தாவர இலைகளினால் (2) களிமண்ணினால் (3) பலகைத் துண்டுகளினால்

(47) இன்று அமாவாசைத் தினமாகும். இன்றைக்கு 7 நாட்களுக்குப் பின்னர் காணக்கிடைக்கும் சந்திரனின் வடிவம்,

(1)  (2)  (3) 

(48) மலேசியா, தாய்லாந்து ஆகிய நாடுகள் அமைந்துள்ளது இலங்கைக்கு,

(1) மேற்குத் திசையில் (2) கிழக்குத் திசையில் (3) வடக்குத் திசையில்

(49) தேசப்படங்களில் புகையிரதப் பாதைகள் வரையப்பட்டுள்ள நிறம்,

(1) கறுப்பு (2) சிவப்பு (3) ஊதா

(50) தேசிய கீதம் இசைக்கப்படுவது தேசியக் கொடியை,

(1) ஏற்றும்போது (2) ஏற்றுவதற்கு முன் (3) ஏற்றிய பின்

(51) மழைவீழ்ச்சி அளவிடப்படுவது,

(1) மில்லிலீற்றர் மூலம் (2) சென்ரிமீற்றர் மூலம் (3) மில்லிமீற்றர் மூலம்

(52) தேசியக் கொடி அரைக்கம்பத்தில் பறக்கவிடப்படுவது,

(1) சுதந்திர தினத்தன்று (2) தேசிய துக்க தினத்தில் (3) தேசிய விளையாட்டுப் போட்டியின்போது

(53) பராக்கிரம சமுத்திரத்தைக் கட்டிய மன்னன்,

(1) பராக்கிரமபாகு மன்னன் (2) தேவநம்பியதீச மன்னன் (3) தாதுசேன மன்னன்

(54) புனித வெள்ளரசு மரம் அமைந்துள்ளது,

(1) கதிர்காமத்தில் (2) திருகோணமலையில் (3) அநுராதபுரத்தில்

(55) சிறிய நிறக் கடதாசிகளை வெள்ளைத்தாளில் வரையப்பட்டுள்ள உருவம் ஒன்றின் மீது ஒட்டிச் செய்யப்படுகின்ற ஆக்கம் அழைக்கப்படுவது,

(1) ஸ்டென்சில் (2) கொலாஜ் (3) அச்சுப்பதித்தல்

(56) இப்பூக்களை உலர்த்தி அவிப்பதன் மூலம் ஒளடத பானம் தயாரிக்கப்படுகின்றது. அப்பூக்கள்,

(1) வில்வம், பொன்னாவரை (2) கடுபுல், நந்தியாவட்டை (3) கொன்றை, நாகலிங்கம்

(57) உயரத்திலிருந்து விழுந்து கால் எலும்பு முறியப்பெற்ற ஒருவருக்கு வழங்க வேண்டிய முதலுதவி,

(1) காலில் உடைந்த இடத்தைத் துணியினால் இறுக்கமாகக் கட்டுதல்.
(2) நோயாளியை அசைக்காமல் சமதள இடத்தில் வைத்தல்.
(3) காலில் முறிந்த பகுதியை ஓடும் சுத்தமான நீரினால் கழுவுதல்.

(58) இலங்கையின் தேசியக் கொடியில் காணக்கிடைக்காத மூல வர்ணம்,

(1) கறுப்பு (2) சிவப்பு (3) நீலம்

(59) "நான் எனது வீட்டுக்கு ஒளியாவேன். நான் பாடசாலைக்கு ஒளியாவேன். நான் முழு நாட்டுக்கும் ஒளியாவேன்." எனும் கூற்று தியானப் படிமுறைகளில் எந்தப் படியில் அடங்கும்?

(1) மனவுறுதி (2) மலர்வு (3) உடலைத் தளர்த்துதல்

(60) "பூரண பௌர்ணமி தினத்தன்று உதித்துள்ள சந்திரன்." எனும் தலைப்பின் கீழ் மூன்று வாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும். எழுவாய், பயனிலைத் தொடர்பும், எழுத்துக் கூட்டலும் சரியாக இருத்தல் வேண்டும்.)

(1) .....

(2) .....

(3) .....

www.ikedu.lk

மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத்
தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை - 2021

தரம் ஐந்து மாணவர்களுக்கான

முன்னோடிப் பரீட்சை - இல-08

விடைப்பத்திரம்

வினாத்தாள் - I

(01) 2	(02) 3	(03) 1	(04) 2	(05) 1
(06) 3	(07) 2	(08) 1	(09) 3	(10) 1
(11) 2	(12) 1	(13) 3	(14) 2	(15) 3
(16) 1	(17) 3	(18) 2	(19) 1	(20) 3
(21) 2	(22) 3	(23) 1	(24) 2	(25) 1
(26) 2	(27) 3	(28) 2	(29) 1	(30) 2
(31) 1	(32) 3	(33) 2	(34) 3	(35) 1
(36) 2	(37) 1	(38) 3	(39) 1	(40) 2

வினாத்தாள் - II

(01) (i) ஆந்தை (ii) வெள்ளியோடம் (iii) ஆழியும் (iv) வினாக்குறி, வியப்புக்குறி (v) கோடி

(02) (i) நூதனசாலை (ii) கேள்வி (03) (i) செழித்து (ii) கடற்கரையில்

(04) (i) ✗ (ii) ✓ (iii) ✗ (iv) ✗ (5) (i) மிக ஒற்றுமை (ii) எல்லா இடமும் (06) (i) குரலோசை (ii) மலையுச்சி

(07) (i) மனமே (ii) இக்கரை மாட்டுக்கு அக்கரை பச்சை (08) திருடன் (09) மாமா வெற்றிலை பறித்தார்.

(10) அவள் (11) (i) Mouth (ii) Hand (iii) Leg (12) (i) Mother (ii) Bottle

(13) Trees (14) தம்பி இருக்கிறான். (15) ஆப்ப எப்பா.

(16) முப்பத்து மூவாயிரத்து எண்ணூற்றுத் தொண்ணூற்றொன்று (17) (i) சதுரமுகி (ii) 4 (18) 24 (19) 4627

(20) (i)  (ii)  (21)  (22) தென்மேற்குத் திசையில் (23) 22:30 (24) 5*l* 400*ml*

(25) 402km (26) (i) 64 (ii) 2 (27) XIV (28) (i) 5C (ii) ஆண் பிள்ளைகள் (29) ரூபா 24.00

(30) 3	(31) 1	(32) 3	(33) 2	(34) 1
(35) 3	(36) 2	(37) 1	(38) 1	(39) 3
(40) 1	(41) 2	(42) 1	(43) 3	(44) 2
(45) 3	(46) 2	(47) 1	(48) 2	(49) 1
(50) 3	(51) 3	(52) 2	(53) 1	(54) 3
(55) 2	(56) 1	(57) 2	(58) 3	(59) 1

(60) எழுவாய், பயனிலைத் தொடர்பும், எழுத்துக் கூட்டலும் சரியான முறையில் அமையுமாறு வாக்கியங்கள் எழுதியிருப்பின் புள்ளிகள் வழங்கவும்.

புள்ளித்திட்டம்

வினாத்தாள் I ($2\frac{1}{2}$ X **40** = **100** புள்ளிகள்)

வினாத்தாள் II (1) 5 புள்ளிகள் (2) 2 புள்ளிகள் (3) 2 புள்ளிகள் (4) 4 புள்ளிகள் (5) 2 புள்ளிகள் (6) 2 புள்ளிகள்
(7) 2 புள்ளிகள் (8) 1 புள்ளி (9) 1 புள்ளி (10) 1 புள்ளி (11) 3 புள்ளிகள் (12) 2 புள்ளிகள்
(13) 1 புள்ளி (14) 1 புள்ளி (15) 1 புள்ளி (16) 2 புள்ளிகள் (17) 3 புள்ளிகள் (18) 2 புள்ளிகள்
(19) 2 புள்ளிகள் (20) 3 புள்ளிகள் (21) 2 புள்ளிகள் (22) 2 புள்ளிகள் (23) 2 புள்ளிகள் (24) 2 புள்ளிகள்
(25) 2 புள்ளிகள் (26) 3 புள்ளிகள் (27) 2 புள்ளிகள் (28) 3 புள்ளிகள் (29) 2 புள்ளிகள்

(30 — 59) 30 புள்ளிகள் (60) 6 புள்ளிகள், முழு விடைத்தாளையும் கவனத்திற்கொண்டு கையெழுத்து, இலக்கங்கள் போன்றவை தெளிவாகவும் சரியாகவும் எழுதப்பட்டிருப்பின் 2 புள்ளிகள் வழங்கவும்.

www.ikeau.lk